காலை முரசு

பக்கங்கள் 23

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | மார்கழி 28 திங்கட்கிழமை 12.01.2026 | அதிர்வு 165


## கோர விபத்தில் 8 வயது சிறுமி பரிதாபச் சாவு!

### தந்தையின் கண்முன்னே துயரம்

தந்தையுடன் வீதியில் நடந்து சென்ற 8 வயது சிறுமி ஹயஸ் வாகனம் மோதி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். 03 ▸

# பிரதமருக்கு எதிரான பிரேரணை வரும் 20ஆம் திகதியே கையளிப்பு

## தாமதிக்கப்படுவது ஏன்?



பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை எதிர்வரும் 20 ஆம் திகதியளவிலேயே கையளிக்கப்படலாம் எனத் தெரியவருகின்றது.

நம்பிக்கையில்லாப் பிரேரணையை கடந்த 9 ஆம் திகதி சபாநாயகரிடம் கையளிக்கவே பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி திட்டமிட்டிருந்தது. 03 ▸



# ஹரிணியை நீக்கவே முடியாது!

## பிரதமர், கல்வி அமைச்சுப் பதவிகளில் அவர் தொடர்வார் என்றும் அமைச்சர் பிமல் பதிலடி

பிரதமர் பதவியிலிருந்தோ அல்லது கல்வி அமைச்சுப் பதவியிலிருந்தோ கலாநிதி ஹரிணி அமரசூரியவை நீக்குவதற்கான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

அவர் இரு பதவிகளிலும் தொடர்ந்து செயற்படுவார் என்றும், அரசுக்குள் இது குறித்து எந்தவிதமான கருத்து வேறுபாடுகளும் இல்லை என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். 03 ▸

# தையிட்டி திஸ்ஸ விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை பகுதியளவேனும் விடுவிக்க மறுப்பு

## கொழும்புக் கலந்துரையாடலில் திட்டவட்டம்



யாழ்ப்பாணம் – தையிட்டியில் திஸ்ஸ விகாரை அமைப்பதற்காக ஆக்கிரமிக்கப்பட்ட பொதுமக்களின் காணிகளை விடுவிப்பதற்கு, திஸ்ஸ விகாரையின் விகாராதிபதியும் பௌத்த சாசன அமைச்சின் பிரதிநிதிகளும் திட்டவட்டமாக மறுத்துள்ளனர்.

திஸ்ஸ விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள் தொடர்பில் தீர்மானிப்பதற்காக விசேட குழுவொன்று அமைக்கப்பட்டிருந்தது. அந்தக் குழு கொழும்பில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கூடிக் கலந்துரையாடல் நடத்தியுள்ளது. இதன்போதே, திஸ்ஸ விகாரைக்காக 03 ▸




தைப்பொங்கல் தினத்தன்று மன்னாருக்கும் யாழ்ப்பாணத்துக்கும் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க விஜயம் செய்கிறார்.

மன்னாரில் சீலிக்ஸ் நிறுவனம் அமைத்த நான்கு மின் உற்பத்திக் காற்றாடிகளை அவர் ஆரம்பித்து வைக்கிறார். அதே சமயம் ஹெய்லீஸ் நிறுவனம் அமைக்கவிருக்கும் பத்து புதிய மின் உற்பத்தி காற்றாடிகளுக்கான அடிக்கல்லையும் அச்சமயம் அவர் நாட்டி வைப்பார்.

உயிரே போனாலும், இந்த 14 காற்றாடிகளையும் மன்னார் தீவில் அமைக்க விடமாட்டோம் என்று சூளுரைத்த மன்னார் ஆயரும் அவரது மறைமாவட்ட 04 ▸

# இலங்கைத் தமிழர்களுக்கு கூட்டாட்சி முறையே தேவை

## அதற்கான தூதரக நடவடிக்கைகளை எடுக்க பிரதமர் மோடிக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம்

(திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது)

இலங்கையில் தற்போது நடைபெற்று வரும் அரசமைப்புச் சீர்திருத்தங்களால் இலங்கைத் தமிழ்ச் சமூகத்திற்கு ஏற்படும் கடுமையான பாதிப்புகளை களைந்திட வேண்டுமென்றும், தமிழ் மக்களின் குறைகளை நிவர்த்தி செய்யும் வகையிலான ஓர் அரசமைப்புச் செயல்முறையைக் கொண்டுவருவதற்கு, இந்திய அரசு இலங்கை அதிகாரிகளுடன் உயர்மட்ட அளவில் தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று கோரி, பிரதமர் நரேந்திர மோடிக்கு, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்தக் கடிதத்தை எழுதியுள்ளார்.

இலங்கையில் உள்ள தமிழ்ச் சமூகத்தின் நலன் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான ஆழ்ந்த கவலைக்குரிய ஒரு விஷயம் குறித்து பிரதமரின் கவனத்திற்குத் தாம் கொண்டுவருகிறார் என அவர் தெரிவித்துள்ளார்.

ஆழமான வரலாற்று, கலாசார மற்றும் உணர்வு பூர்வமான பிணைப்புகளின் காரணமாக, இலங்கையில் உள்ள மிழர்களின் உரிமைகளையும், எண்ணங்களையும் நிலைநிறுத்துவதில் தமிழ்நாடு முன்னணியில் இருந்து வருகிறது என்றும், தமிழ்நாட்டின் முதல்-அமைச்சர் என்ற முறையில், இந்தியா மற்றும் இலங்கையில் உள்ள மரியாதைக்குரிய தமிழ்த் தலைவர்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில், இலங்கையில் முன்மொழியப்பட்ட புதிய அரசமைப்புத் தொடர்பான பிரச்சினை குறித்து பிரதமரின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருவது தனது கடமை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் தற்போது நடைபெற்று வரும் அரசமைப்புச் சீர்திருத்தங்களால் இலங்கைத் தமிழ்ச் சமூகத்திற்கு ஏற்படும் கடுமையான பாதிப்புகளை எடுத்துரைக்கும் விரிவான கோரிக்கைகளை தாம் பெற்றுள்ளமையை அவர் குறிப்பிட்டுள்ளார்

இலங்கைத் தமிழர்கள் 77 ஆண்டுகளுக்கும் மேலாக, திட்டமிட்ட பாகுபாடு, வன்முறை மற்றும் அவர்களின் உண்மையான உரிமைகளைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளைச் சகித்து வந்துள்ளனர் என்றும், பலர், இதனை தங்கள் சமூகத்திற்கு எதிரான இனப்படுகொலை என்று விவரிக்கும் ஒரு நிலைக்கு வழிவகுத்துள்ளது என்றும் முதல்-அமைச்சர் வருத்தத்தோடு சுட்டிக்காட்டியுள்ளார்.

சுதந்திரத்திற்குப் பிந்தைய இலங்கையின் அரசமைப்புகள் (1947, 1972, மற்றும் 1978ம் ஆண்டுகளின் அரசமைப்புகள்) அனைத்தும் ஓர் ஒற்றையாட்சி அரசுக் கட்டமைப்பில் வேரூன்றியிருந்தன என்றும், இது திட்டமிட்ட இன வன்முறை, கட்டமைப்பு ரீதியான ஒடுக்கு



முறை மற்றும் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளைமறுப்பதற்குவழிவகுத்தது என்றும் தெரிவித்துள்ள அவர், உள்நாட்டுப் போர் முடிவடைந்த கடந்த 16 ஆண்டுகளாக, இந்த ஒற்றையாட்சிக் கட்டமைப்பு, பாரம்பரியமாக தமிழர்கள் வாழ்ந்து வந்த பகுதிகளில் மக்கள் தொகை மாற்றங்கள், நில அபகரிப்புகள் மற்றும் தமிழ் அடையாளத்தின் சிதைவு ஆகியவற்றிற்கு தொடர்ந்து வழிவகுத்து வருவதாக வருத்தத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான, நாடாளுமன்றத்தில் முழுப்பெரும்பான்மையைக் கொண்ட தற்போதைய இலங்கை அரசாங்கம், இனப்பிரச்சினைகளைத் தீர்க்கும் போர்வையில் ஒரு புதிய அரசமைப்பை அறிமுகப்படுத்தும் முயற்சிகளைத் துரிதப்படுத்தி வருகிறது என்று தெரிவித்துள்ள முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்த முன்மொழியப்பட்ட கட்டமைப்பு மீண்டும் ஒரு ஒற்றையாட்சி "எக்கியராஜ்ய" (ஒற்றையாட்சி அரசு) மாதிரியை வலுப்படுத்துவதாகத் தெரிகிறது என்றும், இது அரசியல் சுயாட்சிக்கான தமிழர்களின் நியாயமான எண்ணங்களைப் புறக்கணித்து, அதன் மூலம் அவர்களை மேலும் ஓரங்கட்டி, அச்சுறுத்தும் வகையில் அமைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சூழலில், இந்திய அரசால் பூட்டானில் ஏற்பாடு செய்யப்பட்ட 1985 அமைதிப் பேச்சுவார்த்தைகளின் போது, தமிழ் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்ட திம்பு கோட்பாடுகளில் (Thimpu Principles) குறிப்பிடப்பட்ட கோட்பாடுகளையே, தற்போது பெறப்பட்டுள்ள கோரிக்கைகளில் வலியுறுத்தப்பட்டுள்ளதாகவும், அந்த வகையில், இலங்கைத் தமிழர்களுக்கான ஒரு தனித்துவமான தேசத்தை அங்கீகரித்தல் (தமிழர் தேசியம்), வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைத் தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகமாக ஏற்றுக்கொள்வது (தமிழர் தாயகம்), தமிழ் தேசத்திற்கான தன்னாட்சி உரிமையை உறுதிப்படுத்துதல் (தமிழர் தன்னாட்சி உரிமை) மற்றும் மலையகத் தமிழர்களுக்கான முழு குடியுரிமை உரிமைகள் உட்பட அனைத்து குடிமக்களுக்கும் சமத்துவத்தையும், பாகுபாடின்மையையும் உறுதிசெய்யும் ஒரு கூட்டாட்சி ஆட்சி முறையை நிறுவுதல் போன்றவற்றையே இந்தக் கோட்பாடுகள் வலியுறுத்துகின்றன என்றும் முதல்-அமைச்சர் தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

இந்தக் கூறுகளை உள்ளடக்காமல் கொண்டுவரப்படும் எந்தவொரு புதிய அரசமைப்பும், அநீதி மற்றும் நிலையற்ற தன்மை தொடர வழிவகுக்கும் என்றும், இது மீண்டும் மோதல்களுக்கும், மனிதாபிமான நெருக்கடிகளுக்கும் வழிவகுக்கும் அபாயத்தை ஏற்படுத்தும் என்று சுட்டிக்காட்டியுள்ள முதல்-அமைச்சர், 1987 ஆன் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தம் உட்பட, வரலாற்று ரீதியாக இலங்கையுடன் கொண்டுள்ள நட்புறவின் காரணமாக இலங்கையில் அமைதி மற்றும் நீதிக்காக நீண்டகாலமாக அர்ப்பணிப்புடன் செயல்படவேண்டிய தார்மீகக் கடமையை இந்தியா கொண்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர்களின் அவல நிலை, தமிழ்நாட்டில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்றும், லட்சக்கணக்கான மக்கள், அங்குள்ளவர்களைத் தங்கள் உறவினர்களாகக் கருதுகின்றனர் என்றும் தெரிவித்துள்ள முதல்-அமைச்சர், இலங்கையில் வாழும் தமிழர்களின் நிலைமையில் ஏற்படும் எந்தவொரு சரிவும் இருதரப்பு உறவுகளுக்கும், இரு நாடுகளுக்கிடையேயான உறுதிப்பாட்டிற்கும் பெரிய அளவில் தாக்கங்களை ஏற்படுத்தும் என்றும் கவலையோடு குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சூழ்நிலையில், தமிழ் மக்களின் குறைகளை உண்மையாக நிவர்த்தி செய்யும் ஓர் அரசமைப்புச் செயல்முறையைக் கொண்டுவருவதற்கு, இந்திய அரசாங்கம் இலங்கை அதிகாரிகளுடன் உயர்மட்ட அளவில் தூதரக நடவடிக்கைகள மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ள முதல்-அமைச்சர், குறிப்பாக, மாகாணங்களுக்கு அதிகாரப் பரவலாக்கம் செய்யும், இனச் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்கும், மற்றும் பன்முகத்தன்மை, சமத்துவக் கோட்பாடுகளை நிலைநிறுத்தும் கூட்டாட்சி முறையை உருவாக்குவதற்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் தனது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

இத்தகைய அணுகுமுறை, பிராந்திய அமைதிக்கு உத்தரவாதம் அளிக்கும் இந்தியாவின் பங்கை மதிப்பது மட்டுமல்லாமல், கூட்டாட்சி மற்றும் மொழி மற்றும் இனச் சிறுபான்மையினரைப் பாதுகாப்பது குறித்த நமது அரசமைப்பு விழுமியங்களுடனும் ஒத்துப்போகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில், பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையின் கீழ், இலங்கைத் தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாக்க இந்தியா முனைப்பான நடவடிக்கைகளை எடுக்கும் என்றும், ஒரு நியாயமான மற்றும் நீடித்த தீர்வுக்கு அது பங்களிக்கும் என உறுதியாக தான் நம்புகிறார் எனவும், முதல்வர் தான் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

### திஸ்ஸ விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்ட

# காணிகளை விடுவிக்க எவரும் மறுக்கவில்லை

## அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

"யாழ். தையிட்டி திஸ்ஸ விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை விடுவிக்க முடியாது என்று எவரும் தெரிவிக்கவில்லை."

– இவ்வாறு அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

திஸ்ஸ விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள் தொடர்பில் தீர்மானிப்பதற்காகக் கொழும்பில் இடம்பெற்ற கலந்துரையாடலில், காணிகளை விடுவிக்க மறுப்புத் தெரிவிக்கப்பட்டமை தொடர்பில் நம்பகரமாகக் கிடைத்த தகவலுக்கு அமைய வினவியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.



"காணிகளை விடுவிக்க முடியாது என எவரும் கூறவில்லை. விரைவில் அடுத்த கட்ட கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. பெரும்பாலும் எதிர்வரும் மாதம் அந்தக் கலந்துரையாடல் இடம்பெறும்." – என்று அமைச்சர் சந்திரசேகர் மேலும் தெரிவித்தார்.

## பசுமை இயக்கத்தின் அரசியல் உரையரங்கு

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் சமகால அரசியல் உரையரங்கு நாளை செவ்வாய்க்கிழமை (13 ஆம் திகதி) பிற்பகல் 3.00 மணிக்கு நல்லூர் சட்டநாதர் ஆலயத்துக்கு அருகாமையில் உள்ள திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்வுரையரங்கில் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் யாழ். பல்கலைக்கழகத்தின் அரசறிவியற் துறையின் முதுநிலை விரிவுரையாளர் பேராசிரியர் கே.ரி. கணேசலிங்கம் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் இலங்கை அரசியலில் முக்கியத்துவம் வாய்ந்த பேசுபொருளாக உள்ள விடயங்கள் தொடர்பாக சமகால அரசியல் உரையரங்கு என்ற நிகழ்ச்சியை நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### கோர விபத்தில்...

இந்தத் துயரச் சம்பவம் நேற்று மாலை குருநாகல் மாவட்டம், கல்கமுவை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

சிறுமி தனது தந்தையுடன் வீதியின் ஓரமாக நடந்து சென்று கொண்டிருந்த போது, அவர்களின் பின்னால் அதிவேகமாக வந்த ஹயஸ் வாகனம் கட்டுப்பாட்டை இழந்து அவர்கள் மீது மோதியுள்ளது. இதில் சிறுமி கடுமையாகக் காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

விபத்தில் சிறுமியின் தந்தை சிறு காயங்களுடன் உயிர்தப்பியுள்ளார்.

அவர் உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றார். அவரது நிலை ஆபத்தானதல்ல என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் இடம்பெற்ற உடனேயே பொலிஸார் விபத்து நடந்த இடத்துக்கு விரைந்து சென்று விசாரணைகளை ஆரம்பித்தனர்.

விபத்துக்குக் காரணமான ஹயஸ் வாகனம் பொலிஸாரின் கட்டுப்பாட்டில் எடுக்கப்பட்டுள்ளதுடன், வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்த சிறுமியின் உடல் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### பிரதமருக்கு...

இதனையொட்டி எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கையெழுத்தும் திரட்டப்பட்டிருந்தது.

இந்நிலையில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஏனைய சில பாடங்களிலும் உள்ள சிக்கல்கள் குறித்து ஐக்கிய மக்கள் சக்திக்குத் தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது என அறியமுடிகின்றது.

எனவே, இது குறித்த தகவல்களையும் சேகரித்து காத்திரமானதொரு பிரேரணையை முன்வைக்கும் நோக்கிலேயேநம்பிக்கையில்லாப்பிரேரணைதாமதிக்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

தரம் 6 ஆங்கிலப் பாடத்தில் வயதுவந்தோர் வலைத்தளத்துக்கான இணைய இணைப்பு சேர்க்கப்பட்ட விவகாரம் இலங்கை அரசியலில் பெரும் பேசுபொருளாக மாறியுள்ளது.

இதனை மையப்படுத்தியதாகவே கல்வி அமைச்சரான பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருவதற்குரிய ஏற்பாடு இடம்பெறுகின்றது.

எனினும், கல்வி மறுசீரமைப்பைச் சீர்குலைப்பதற்கான எதிரணிகளின் சதி நடவடிக்கை இதுவென நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் ஆளுங்கட்சி கருத்து வெளியிட்டுள்ளது.

ஜனவரி மாதத்துக்குரிய இரண்டாவது வார நாடாளுமன்ற அமர்வு எதிர்வரும் 20 ஆம் திகதி ஆரம்பமாகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

### தையிட்டி திஸ்ஸ...

அபகரிக்கப்பட்ட காணிகளை பகுதியளவேனும் விடுவிப்பதற்கு திஸ்ஸ விகாரையின் விகாராதிபதியும் பௌத்த சாசன அமைச்சின் பிரதிநிதிகளும் திட்டவட்டமாக மறுத்துள்ளனர்.

அந்தக் காணி முற்றுமுழுதாக விகாரைக்குச் சொந்தம் என்பதால், அதை விடுவிக்கும் எண்ணம் இல்லை என்றும், அவ்வாறு விடுவிப்பது பொருத்தமாக இருக்காது எனவும் அவர்கள் அந்தக் கலந்துரையாடலில் கூறியுள்ளனர்.

திஸ்ஸ விகாரை அமைக்கப்பட்டுள்ள குறிப்பிட்டத்தக்க பகுதியைத் தவிர, ஏனைய காணிகளை விடுவிப்பதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்று அண்மையில் தகவல்கள் வெளிவந்திருந்தன. விடுவிப்புக்காக காணி அளவீடுகள் இடம்பெறுகின்றன என்றும் கூறப்பட்டது. இவ்வாறான நிலையிலேயே, பகுதியளவேனும் காணிகளை விடுவிப்பதற்குத் தற்போது திட்டவட்டமாக மறுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலர், தெல்லிப்பழை பிரதேசசெயலர், பௌத்த சாசன அமைச்சக அதிகாரிகள் உள்ளிட்ட பலர் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### ஹரிணியை...

பிரதமர் மீதான குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை என்றும், பிரதமரின் தலைமையில் அரசின் பணிகள் திட்டமிட்டபடி முன்னெடுக்கப்படுகின்றன என்றும் அவர் கூறினார்.

கல்வித் துறையில் முன்னெடுக்கப்பட்டு வரும் சீர்திருத்தங்கள் தொடர்ச்சியாகச் செயற்படுத்தப்படும் என்றும், அதற்காக ஹரிணி அமரசூரியவின் தலைமை அவசியமானதாகும் என்றும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க சுட்டிக்காட்டினார்.

கல்வி அமைச்சர் என்ற ரீதியில் பிரதமருக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டுவரத் தீர்மானித்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பாதுகாப்புத் தரப்பினரின் சொல்லுக்கு அடிபணிந்துவிட்டது அநுர அரசாங்கம்!

## பயங்கரவாத புதிய சட்ட வரைவு குறித்து சுமந்திரன் சாடல்

2023 இல் அப்போதைய அரசாங்கத்தால் முன்மொழியப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்துக்கு எதிராக உயர்நீதிமன்றத்தை நாடிய தேசிய மக்கள் சக்தி, இப்போது பாதுகாப்புத் தரப்பினரின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து அதனையொத்த சட்ட வரைவையே பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைவு எனும் பெயரில் வெளியிட்டிருக்கின்றது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

தற்போது நடைமுறையில் உள்ள 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத்தடைச் சட்டத்துக்குப் பதிலாக பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டம் எனும் புதிய சட்டத்தைக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதனை இலக்காகக்கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள சட்ட வரைவு நீதியமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளப் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பதிலீடு செய்யும் வகையில் அரசாங்கத்தால் புதிதாக வெளியிடப்பட்டிருக்கும் வரைவில் முன்னைய திருத்தச் சட்டமூலங்களை விடவும் மோசமான விடயங்கள் உள்வாங்கப்பட்டிருப்பதாகவும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்குவதை விடுத்து, அதனைப் பதிலீடு செய்வதற்கான அரசாங்கத்தின் நடவடிக்கைகளை முற்றாக எதிர்ப்பதாகவும் சுமந்திரன் ஏற்கனவே தெரிவித்திருந்தார்.



இந்நிலையில் புதிய சட்ட வரைவின் உள்ளடக்கங்கள் குறித்துத் தாம் ஆராய்ந்து வருவதாகவும், அதற்கமைய இந்த வரைவின் உள்ளடக்கங்களில் பெரும்பாலானவை கடந்த 2023 ஆம் ஆண்டு அப்போதைய அரசாங்கத்தால் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தின் உள்ளடக்கங்களையே ஒத்திருப்பதாகவும் சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

அவ்வேளையில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை சவாலுக்கு உட்படுத்தி தேசிய மக்கள் சக்தியின் சார்பில் இப்போது வெளிவிவகார அமைச்சராகப் பதவி வகிக்கும் விஜித ஹேரத் உயர்நீதிமன்றத்தை நாடினார். ஆனால், இப்போது அதன் உள்ளடக்கத்திலிருந்து பெருமளவுக்கு மாறுபடாத புதிய வரைவை அரசாங்கம் முன்மொழிந்திருக்கிறது என்றும் சுமந்திரன் கரிசனை வெளியிட்டார்.

அதுமாத்திரமன்றி இந்தப் புதிய வரைவைத் தயாரித்த நிபுணர் குழுவில் அங்கம் வகித்த பாதுகாப்புத்துறையைச் சேர்ந்த பிரதிநிதிகள், பயங்கரவாதச் செயற்பாடுகளைத் தடுப்பதற்கு இந்தப் புதிய வரைவு கூடப் போதுமானதல்ல என முரண்பட்டதாக அறியக் கிடைத்ததாகச் சுட்டிக்காட்டிய சுமந்திரன், எனவே எதிர்க்கட்சியாக இருந்தபோது முன்னிறுத்திய தமது கொள்கையைப் புறந்தள்ளிட்டு, இப்போது அரசாங்கம் பாதுகாப்புத் தரப்பினரின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து இந்த வரைவை வெளியிட்டிருப்பதாகவும் விசனம் வெளியிட்டார்.

இவ்வாறானதொரு பின்னணியில் புதிய வரைவின் உள்ளடக்கம் தொடர்பில் முழுமையாக ஆராய்ந்ததன் பின்னர், வெகுவிரைவில் தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி நீதி அமைச்சுக்குக் கடிதம் அனுப்பிவைப்போம் என்றும் சுமந்திரன் மேலும் குறிப்பிட்டார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### இரகசியம் பரகசியம்...

போராட்டக்காரர்களும் இப்போது பம்மி கொண்டு விட்டார்கள். நீண்ட காலம் இந்த விடயத்தை வைத்து ஆரவாரம் பண்ணிய அவர்கள் ஏன் இப்போது அம்சடக்காக அடங்கிப் போனார்கள் என்பது புரியவில்லை.

மன்னார் ஆயர் மூன்றாம் தரப்புக்குத் தெரியாமல் கொழும்பில் திடு திப்பெனத் தனியாகச் சென்று ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவைச் சந்தித்த போதே, அந்தச் சந்திப்புப் பற்றித் தகவல் வெளியிட்டு 'டீல்' முடிந்து விட்டது என என் பத்தியில் கோடி காட்டி இருந்தேன். விவரம் வெளிவரவில்லை, மலிந்தால் சந்தைக்கு வரும் என்று குறிப்பிட்டிருந்தேன்.

அந்தச் செய்தி வந்த பின்னரும் போராட்டம் தொடரும் என்று ஆரவாரம் பண்ணினார்கள். ஆனால் இப்போது தாங்களாகவே அடங்கி விட்டார்கள். ஆனால் டீலின் விவரம் வெளிவரவில்லை. அரசல் புரசலாக பல விடயங்கள் பேசப்படுகின்றன. தகுந்த ஆதாரங்கள் கைவசம் இல்லாமல் அவை பற்றி வெளிப்படையாகக் குறிப்பிடுவது பொறுப்பற்ற செயலாகிவிடும். அதனால் அமைதி காக்கிறேன். ஆனாலும் காணிப் பதிவுகள் பற்றிய பல பேச்சுக்கள் அடிபடுகின்றன. அவை ஆதாரமாக வெளிப்படக்கூடியவை. நீண்ட காலம் அவை அமுக்கப்பட்டு இருக்காது. வெளியே வரும் என்று நம்புகிறேன்.

இந்தப் போராட்டத்தை சத்தம் சந்தடியின்றிக் கைவிடுவதற்கு ஜனாதிபதி தரப்பிலிருந்து ஆயர் இல்லத்திற்கு மறுவளமாகக் கொடுக்கப்பட்ட வாக்குறுதியும், அதன் தொடர் நடவடிக்கைகளும் யாது என்பது அம்பலமாக வேண்டும் என்பதே எல்லோரதும் எதிர்பார்ப்பு.

அதற்கிடையில் 'ராமர் பாலம்' தொடர்பில் வடக்கு மாகாண சுற்றுலா அபிவிருத்தி சபை மன்னார் பாலத்தடியில் காட்சிக்கு வைத்துள்ள விளம்பரப் பதாகைக்கு எதிராக இன்று அங்கு போராட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

* * *

ஒரு காலத்தில் இலங்கை ரயில்வேத் திணைகளத்தையே தூக்கி நிறுத்தி வைத்திருந்தது பெரும் வருமானம் ஈட்டும் மார்க்கமாக அமைந்த வடக்குக்கான ரயில் சேவைதான்.

இப்போது அது பெரும்பாலும் 'சீக்காளிப் பிள்ளை'(நோயாளிப் பிள்ளை) போல மாறிவிட்டது.

திருத்தங்கள் என்ற பெயரில் மாதக் கணக்கில் அந்த மார்க்கத்தில் ரயில் சேவையை இழுத்து மூடி நிறுத்துவது இப்போது வழமையான போக்காகி விட்டது.

இப்போதும் கூட பேரிடர் பாதிப்பினால் திருத்தப்பட்ட பாதையில் ரயில் சேவை நடப்பதாகக் கூறப்படுகிறது. அதுவும் தினசரி நான்கு சேவைகள் முழுமூச்சாக நடைபெற்ற மார்க்கத்தில் இப்போது பெயருக்கு ஒன்று மட்டும்.

அதிலும் இன்னமும் மூன்று கட்டங்களில் திரும்பவும் திருத்த வேலைகள் என்கிறார்கள். ஒவ்வொரு கட்டத்துக்கும் ஒன்று முதல் இரண்டு மாதங்கள் ரயில் சேவை இடையில் வெட்டப்படும்.

பிறகு என்ன? யாழ் – கொழும்பு மார்க்கத்தில் தனியார் பஸ் வைகள் கொடிகட்டிப் பறக்கும்.

ரயில்வேத் தரப்புக்கும் தனியார் பஸ் சேவை நடத்துவோருக்கும் இடையில் அப்படி ஒரு ஒட்டுறவு இணைக்கப்பாடு. அதில் என்ன விடயங்கள் புதைந்து கிடக்கின்றன என்பது ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம்...!



# செம்மணி படுகொலை விவகாரத்தை கைகழுவி விடவே அரசு முயற்சிக்கிறது

## சோமரத்ன ராஜபக்ஷ குற்றச்சாட்டு



காணாமல்போனோர் பற்றிய பணிமனையினர் செம்மணி படுகொலை தொடர்பில் விரிவான விசாரணைகளை மேற்கொள்ளாமல், காணாமல்போனோரில் சிலரின் குடும்பங்களுக்கு இழப்பீட்டுத் தொகையை வழங்கி, அந்த விவகாரத்தை முடிவுக்குக் கொண்டுவந்து கைகழுவி விடுவதற்கே முயற்சிக்கின்றனர் என்று கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ குற்றஞ்சாட்டியுள்ளார்.

சோமரத்ன ராஜபக்ஷவைக் காணாமல்போனோர் பணிமனையினர் கடந்த வெள்ளிக்கிழமை இரண்டாவது தடவையாகச் சந்தித்தனர். இந்தச் சந்திப்பு தொடர்பில் சோமரத்ன தம்மிடம் தெரிவித்தவை என்று அவரின் மனைவி எஸ். சி. விஜயவிக்ரம ஊடகங்களுக்குத் தெரிவித்த விடயங்கள் வருமாறு:-

"செம்மணி படுகொலை தொடர்பான விவரங்களைக் கேட்டறியும் நோக்கில் காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் அதிகாரிகள் கடந்த வெள்ளிக்கிழமை எனது கணவரை வெலிக்கடைச் சிறைச்சாலையில் சந்தித்தனர்.

இதன்படி அந்த அலுவலகத்தின் தலைவரால் எனது கணவரிடம் கூறப்பட்ட விடயங்களின் பிரகாரம், காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தினர் செம்மணி படுகொலை தொடர்பில் விரிவான விசாரணைகளை மேற்கொள்ளாமல், காணாமல்போனோரில் சிலரது குடும்பங்களுக்கு இழப்பீட்டுத் தொகையை வழங்கி, அந்த விவகாரத்தை முடிவுக்குக்கொண்டு வந்து, சர்வதேச சமூகத்தின் மத்தியில் நாட்டுக்கு ஏற்பட்டிருக்கும் அவப்பெயரைச் சீரமைப்பதற்கே முயற்சிக்கின்றனர் என்ற விடயம் தெளிவாகப் புலப்பட்டதாக எனது கணவர் கூறினார்.

செம்மணி மனிதப் புதைகுழி குறித்து 09.07.2025 அன்று எனது கணவர் சார்பில் கடிதமொன்றை அனுப்பி வைத்திருந்ததுடன் 04.10.2025 அன்று இந்த விவகாரம் தொடர்பில் எனது கணவர் அவரது சட்டத்தரணி ஊடாக சத்தியக்கடதாசி ஒன்றையும் வழங்கியிருந்தார். அதில் அவர் 1996 ஆம் ஆண்டளவிலே யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற காணாமல்

ஆக்கப்படல்கள் தொடர்பில் தகவல்களை வெளிப்படுத்தியிருந்தார். ஆனால், அரசாங்கம் இவையனைத்தையும் புறந்தள்ளிவிட்டு, சொற்பளவானோருக்கு இழப்பீட்டை வழங்கி, இந்த விவகாரத்தைக் கைகழுவி விடுவதற்கே முயற்சிக்கின்றது." - என்றும் கூறியுள்ளார்.

# ‘மலையக அரசியல் அரங்கம்’ அரசியல் கட்சியாக அங்கீகாரம்




கடந்த நான்கு ஆண்டுகளாக சமூக அரசியல் தளத்தில் இயங்கி வந்த மலையக அரசியல் அரங்கம் இலங்கை தேர்தல்கள் ஆணையகத்தால் அரசியல் கட்சியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்று அதன் செயலதிபரும் முன்னாள் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் திலகராஜா தெரிவித்தார்.

மலையக அரசியல் அரங்கத்தின் ஊடகச் சந்திப்பு நேற்றுமுன்தினம் ஹட்டனில் இடம்பெற்றது.

இந்த ஊடகச் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

“மலையகத்தில் அறிவார்ந்த அரசியல் உரையாடலை வளர்த்தல், ஆண்களுக்கு சமாந்திரமாக பெண்களுக்கும் சம வாய்ப்பு அளித்தல், மாவட்ட எல்லைகளைக் கடந்த மலையக அரசியல், அடுத்த தலைமுறைக்கான அரசியல் பாலமாக செயற்படுதல் எனும் பிரதான இலக்குகளைக் கொண்டு கடந்த நான்கு ஆண்டுகளாக சமூக அரசியல் தளத்தில் இயங்கிவந்த மலையக அரசியல் அரங்கம் 2026 ஆம் ஆண்டு முதல் இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாக பதிவு செய்யப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதுடன் ‘சிறகு’ சின்னமும் வழங்கப்பட்டுள்ளது.

மலையகத்தில் உரிமை சார்ந்த அரசியல் முனைவைப்புக்கான தேவை எப்போதும் இருந்து வருகின்றது. 2026 ஆண்டு அரங்கத்தின் அரசியல் நிகழ்ச்சி நிரலாக நிர்வாக ‘மலையக பக்கங்களின் உரிமைக் கோரிக்கை: நிலமும் நிர்வாகமும்’ எனும் தொனிப் பொருளில் மலையக மாவட்டங்கள் தோறும் தொடர் ஆய்வு கூட்டங்களை நடத்துவதற்கும் 2026 ஆண்டு இறுதியில் மலையக மக்களின் டித்வா புயல் அனர்த்தத்தின் பின்னான மதிப்பீட்டறிக்கையையும் தயார் செய்து ‘மலையகத் தீர்மானம்’ ஒன்றை நிறைவேற்றி இலங்கை அரசுக்கும் சர்வதேச அரங்குக்கும் கொண்டு செல்வதற்கும் தீர்மானித்துள்ளோம்.

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல் கலப்பு முறையிலா அல்லது விகிதாசார முறையிலா எந்த முறைமையில் நடைபெறும் என இன்னும் தீர்மானிக்கப் படவில்லை. அரசு அதற்காகக் குழு ஒன்றை நியமித்துள்ளது.

இப்போதைய மாகாண சபையில் மலையக மக்களுக்கு உரிமைகள் ஏதும் குறித்து வைக்கப்படவில்லை. அத்தகைய அதிகாரங்கள் எவ்வாறானதாக அமைதல் வேண்டும் எனும் அடிப்படையில் உடன்பாடுடைய அமைப்புகளுடன் கூட்டணியாக இணைந்து போட்டியிடவும் தயாராகவுள்ளோம்.” – என்றார்.






# கலகலப்பாக அரங்கேறிய ஹைக்கூ கவியரங்கம்









புதிய அலை கலை வட்டத்தின் இளைஞர் அணி மாதாந்தம் நடத்தும் ஹைக்கூ கவியரங்கத்தின் 8ஆவது அமர்வு கொழும்பு – 13,புதுச்செட்டித் தெரு வில் அமைந்துள்ள எக்ஸலன்ஸ் சர்வதேச பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது.

புதிய அலை கலை வட்ட மகளிர் அணியின் உபதலைவியும் கவிதாயினியுமான ஷர்மிளா பார்த்திபன் நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார்.

நிகழ்வில் பங்கேற்று தமது திறமைகளை வெளிக் காட்டிய கவி ஆர்வலர்களைப் படங்களில் காணலாம்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அந்நிய செலாவணி அதிகரிப்பு

பொருளாதார நெருக்கடியில் வீழ்ந்து கிடக்கும் இலங்கை தேசம், அதிலிருந்து மீளுவதற்கு அந்நிய செலாவணிக் கையிருப்பை மேம்படுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

பொதுவாக நாடு மூன்று பிரதான வழிகளில் அந்நிய செலாவணிக் கையிருப்பை உயர்த்திக் கொள்ள முடியும்.

ஒன்று - உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்தி, வெளிநாட்டு இறகுமதிகளை குறைத்து, ஏற்றுமதியை அதிகரித்தல்.

அடுத்தது - வெளிநாட்டு உல்லாசப் பயணிகளை நாட்டுக்குள் அழைப்பதன் வாயிலாக அவர்கள் மூலம் அந்நிய செலாவணியை ஈட்டிக் கொள்ளல்.

மூன்றாவது - இலங்கை நாட்டவர்களை வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கு அனுப்பி, அவர்கள் அங்கிருந்து உழைத்து அனுப்பும் பணத்தை அந்நிய செலாவணியாக இங்கு பெற்றுக் கொள்ளுதல்.

இந்த மூன்று விடயங்களில், மூன்றாவது விவகாரத்தில் அதிக அளவு வருமானத்தை நாடு இப்போது ஈட்டி இருப்பதாகச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம், 2025 ஆம் ஆண்டில் நாட்டுக்கு புலம்பெயர்ந்தோர் அதிக அளவிலான பணத்தை அனுப்பியுள்ளனர் என அறிவித்துள்ளது. இது, நாற்பது ஆண்டுகால வெளிநாட்டு வேலைவாய்ப்பு வரலாற்றில் மிக உயர்ந்ததாகும்.

பணியகத்தின்படி, கடந்த ஆண்டு ஜனவரி மற்றும் டிசம்பர் மாதங்களுக்கு இடையில், இலங்கை புலம்பெயர்ந்த தொழிலாளர்களிடமிருந்து 8.07 பில்லியன் அமெரிக்க டொலர்களை (2,432 பில்லியன் ரூபா) பெற்றுள்ளது. இது, 2024 இல் பெறப்பட்ட 6.575 பில்லியன் அமெரிக்க டொலர்களுடன் ஒப்பிடும்போது 22.8 வீத அதிகரிப்பாகும்.

2025 டிசம்பரில் அதிகபட்ச மாதாந்திர பணம் அனுப்பப்பட்டது. மொத்தம் 879.1 மில்லியன் அமெரிக்கடொலர்கள்வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தொழிலாளர்களினால்நாட்டிற்கு-வீட்டிற்கு - அனுப்பப்பட்டுள்ளது.

தரமான, திறமையான தொழிலாளர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதன் மூலம் அந்நிய செலாவணியை ஈட்டும் அரச கொள்கைகளே இந்த வளர்ச்சிக்குக் காரணம் என்று இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. கடந்த ஆண்டு, இந்த முயற்சிகளின் கீழ் 310,000 க்கும் மேற்பட்ட இலங்கையர்கள் வேலை வாய்ப்புக்காக வெளிநாடுகளுக்குச் சென்றனர் என்றும் அது தெரிவித்தது.

அவர்கள் மூலம் பணம் அனுப்புவதில் ஏற்பட்ட இந்த ஏற்றம் நாட்டின் அந்நிய செலாவணி இருப்பு மற்றும் ஒட்டுமொத்த பொருளாதாரத்திற்கு குறிப்பிடத்தக்க ஊக்கத்தை அளிக்கிறது என்றும் அந்தப் பணியகம் தெரிவித்தது.

வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கு நம் நாட்டவரை அனுப்பி வைப்பது ஒரு வகையில் நமது திறமையை ஏற்றுமதி செய்யும் மூளை வடிகால் பின்னடைவாக இருந்தாலும், அதன் மூலம் நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்பு மேம்பட்டு பொருளாதார மீட்சிக்கு வாய்ப்புக் கிட்டியிருப்பதை மறுக்க முடியாது.










# வற்றாப்பளையில் உள்ளக வீதிகள் சீரின்மையால் மக்களுக்கு பாதிப்பு

## நேரில் சென்று ஆராய்ந்தார் ரவிகரன் எம்.பி.

(பா.சதீசன்)

முல்லைத்தீவு – கரைதுறைப்பற்று பிரதேசசெயலர் பிரிவற்குட்பட்ட வற்றாப்பளை தெற்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள உள்ளக வீதிகள் மிகக் கடுமையாகப் பாதிப்படைந்த நிலையில் காணப்படுகின்றமையால் அவ்வீதிகளைப் பயன்படுத்தும் மக்கள் பலத்த போக்குவரத்து நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கின்றனர்.

இந்நிலையில் அப்பகுதி மக்களின் அழைப்பையேற்று வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்று அந்தப் பகுதிக்கு நேரடியாகச் சென்று நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்தார்.

குறிப்பாக வற்றாப்பளை தெற்கு கிராம அலுவலர் பிரிவில் பள்ளவெளி முதலாம் குறுக்குவீதி, 04ஆம் குறுக்குக்குவீதி, 05ஆம்குறுக்குவீதி (சுரேந்திரன் கடைவீதி) என்பன மிக மோசமாகப் பாதிப்படைந்துள்ளன.



ஆகவே இவ்வீதிகளைப் பயன்படுத்தும் மக்கள் எதிர்நோக்கும் இடர்பாடுகளைக் கருத்திற்கொண்டு அந்தச் வீதிகளைச் சீரமைத்துத் தருமாறு நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனிடம் மக்களால் இதன்போது கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது.

இந்நிலையில் மக்கள் எதிர்நோக்கும் சிக்கல் நிலைமைகள் தொடர்பில் நேரடியாகப் பார்வையிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன், கோரிக்கைகளை எழுத்துமூலமாக கையளிக்குமாறு தெரிவித்ததமையுடன், அந்த வீதிகளின் சீரமைப்புத் தொடர்பில் தம்மால் கவனஞ்செலுத்தப்படுமெனத் தெரிவித்திருந்தார்.











# கண்டி - ராகலை வீதியில் பாலம் திறப்பு

பேரிடர் பாதிப்பு புனரமைப்புக்கான இந்தியாவின் உதவி திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட பெய்லி பாலம் நேற்று ஞாயிற்றுக்கிழமை போக்குவரத்துக்காகத் திறக்கப்பட்டது.

இது இலங்கையின் மத்திய மாகாணத்திற்கும் ஊவா மாகாணத்திற்கும் இடையிலான ஒரு முக்கிய வீதி இணைப்பை மீட்டெடுத்துள்ளது.

கண்டி-ராகலை வீதியில் உள்ள B-492 நெடுஞ்சாலையில் உள்ள பெய்லி பாலத்தை இந்தியாவின் தூதுவர் சந்தோஷ்ஜா, போக்குவரத்து துணை அமைச்சர் டொக்டர் பிரசன்ன குணசேன மற்றும் கல்வி மற்றும் உயர்கல்வி துணை அமைச்சர் மதுரா செனவிரத்னே ஆகியோருடன் இணைந்து இலங்கையில் திறந்து வைத்தார்.

டித்வா புயலைத் தொடர்ந்து சேதமடைந்த ஒரு முக்கிய போக்குவரத்து இணைப்பை இந்தப் பாலம் மீண்டும் கட்டமைக்கிறது.

இது குடியிருப்பாளர்கள், பயணிகள் மற்றும் வணிகங்களுக்கான இணைப்பை மேம்படுத்தும் அதேநேரத்தில் இரு மாகாணங்களுக்கிடையில் அத்தியாவசியப் பொருள்களின் இயக்கத்தை எளிதாக்குகிறது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் பேரிடருக்குப் பிந்தைய மீட்பு முயற்சிகளுக்கு இந்தியாவின் ஆதரவின் ஒரு பகுதியாக இந்திய இராணுவத்தின் ADGPI பிரிவால் இந்தப் பாலம் கட்டப்பட்டது.

இலங்கை இராணுவம் உட்பட இலங்கை அதிகாரிகளுடன் இணைந்து, வெளியுறவு அமைச்சகம் மற்றும் பாதுகாப்பு அமைச்சகத்தின் ஒருங்கிணைப்பின் கீழ் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

# கட்டைக்காட்டில் தொடுவாய் வெட்டும் பணி









(மரியசீலன் திலைக்ஸ்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டு பகுதியில் தொடுவாய் வெட்டும் பணி நேற்று சென்மேரிஸ் விளையாட்டுக் கழகத்தால் முன்னெடுக்கப்பட்டது.

வங்காள விரிகுடாவில் உருவாகிய தாழமுக்கத்தின் காரணமாக வடமராட்சி கிழக்கு பகுதிகளில் கடுங்காற்றுடன் பலத்த மழை பெய்திருந்தது.

இதனால் கட்டைக்காட்டின் பல இடங்களில் வெள்ள நீர் தேங்கி இருந்தது.

வெள்ள நீரை கடலுக்கு வெட்டிவிடும் பணி நேற்றுக் காலை கட்டைக்காடு சென்மேரிஸ் விளையாட்டுக் கழகத்தால் முன்னெடுக்கப்பட்டது

மக்கள் குடிமனைக்குள் தேங்கி நின்ற முழு ஈரும் கடலுக்குள் வெற்றிகரமாக வெட்டி விடப்பட்டது.



# அறுகம்பையில் இஸ்ரேலியர்களின் சபாத் இல்லம் சனியன்று மூடு விழா

## இடத்தை மீளப் பெற்ற உரிமையாளர் தமீமுக்கு பாராட்டு

(பாறுக் ஷிஹான்)

பொத்துவில் அறுகம்பையில் இயங்கி வந்த – இஸ்ரேலியர்களின் வணக்க வழி பாடுகள் இடம்பெற்று வருவதாகக் கூறப் படும் – சபாத் இல்லம் நேற்றுமுன்தினம் முதல் உத்தியோகபூர்வமாக மூடப்பட்டது.

பொத்துவிலைச் சேர்ந்த தமீம் எனப்ப டுபவர் சுற்றுலா ஹோட்டல் செய்வதற் காக ஒருவருக்கு விற்பனை செய்த இந்த இடத்தை இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த வர் ஒருவர் பெற்று ஹோட்டல் அன்ட் ரெஸ்டாரண்டாக இயக்கி வந்தார்.

அத்துடன் இஸ்ரேலியர்கள் ஒன்று சேரும் இடமாகவும் பயன்பாடுத்தி வந்த நிலையில் அங்கு இஸ்ரேலியர்கனின் வணக்க வழிபாடுகள் இடம்பெற்று வரு வதான சபாத் இல்லம் என்றும் அது கூறப்பட்டது. இந்த இல்லம் குறித்து அண்மைக் காலமாகப் பல சர்ச்சைகள் எழுந்து வந்தன. சர்வதேச ரீதியாக இந்தப் பிரச்சினை பேசப்பட்டது.

இது தொடர்பாக குறிப்பிட்ட காணியை வழங்கிய தமீம் எனப்படுபவரும் பல வேறு விமர்சனத்துக்குள்ளாகி வந் திருந்தார்.

இதனைத் தொடர்ந்து அரசியல் வட்டா ரத்தில் இவ்விடயம் சூடு பிடித்து இது நாடா ளுமன்றிலும் விவாதிக்கப்பட்டது. நீதி மன்றம் வரையும் சென்றிருந்தது.

இவ்வாறு மக்கள் மத்தியிலும் இது பெரும் பீதியை ஏற்படுத்தி இருந்தது. இத னைத் தொடர்ந்து அந்தக் காணியை விற்பனை செய்த தமீம் என்பவரின் தனிப்பட்ட முயற்சியால் அதிக விலை கொடுத்து அது மீளப்பெறப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து நேற்று முன் தினம் அந்த இடத்தில் காணியின் உரி மையாளர் தமீம் தலைமையில் பால் சோறு வழங்கி JM பிரார்த்தனைகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இந் நிகழ்வில் முஸ்லிம் காங்கிர ஸின் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.அப்துல் வாசித், சட்டத்தரணி சாதீர், பிரதேச சபையின் தவிசாளர் எஸ்.எம்.எம்.முஷாரப், பொத்து வில் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் அப்துல் மஜீத், தேசிய மக்கள் சக்தியின் பொத்துவில் பிரதேச அமைப்பாளர் ஆதம் சலீம், பிரஜா சக்தி உறுப்பினர்கள், உலமாக்கள், சமூக ஆர் வலர்கள் எனப் பலர் கலந்து கொண்ட னர்.

இலங்கையில் சபாத் இல்லமாக இயங்கிய இடங்களில் முதந்தடவையாக மீளப் பெற்ற இடமாக அறுகம்பையில் இயங்கிய இந்த இடம் மட்டுமே என்பது எல்லோராலும் பார்க்கப்படுவதுடன் அரசியலுக்கு அப்பாற்பட்டு தனது இடத்தை மீளப் பெறுவதற்காக இரவு பகலாக முயற்சித்த பொத்துவிலைச் சேர்ந்த தமீம் எல்லோராலும் பாராட்டப் பட்டு வருகின்றார்.

“இந்த இடத்தைக் கொடுத்து நான் பட்ட கஷ்டங்களும் விமர்சனங்களும் ஏராளம்.

எனவே இனி மேல் யாரும் இவ்வாறு இடங்களை விற்பனைக்கோ வாட கைக்கோவிடவேண்டாம்.”–எனஅதன்உரி மையாளர் தமீம் கருத்துரைத்தார்.









# பெண்கள் சுக நிலையச் சிற்றுண்டிச்சாலை யாழ் போதனாவில் திறந்து வைக்கப்பட்டது

(த.சுபேசன்)

நோய்நொடியற்ற ஆரோக்கியமான சமுதாயத்தை கட்டியெழுப்பும் நோக்கில் "சத்தான உணவும்–சந்தோசமான வாழ்வும்" எனும் தொனிப்பொருளில் அமைந்த

பெண்கள் சுக நிலைய சிற்றுண்டிச் சாலை அண்மையில் யாழ் போதானா வைத்தியசாலையில் திறந்து வைக்கப் பட்டுள்ளது.

சத்தான மற்றும் ஆரோக்கியமான உணவுகளை வழங்கும் இந்த பெண்கள் சுகநல நிலைய சிற்றுண்டிச்சாலை, யாழ் போதனா வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இங்கு உடல் நலத்திற்கேற்ற, ஊட்டச்சத்து நிறைந்த உணவுகள் தயாரித்து வழங்கப்படு கின்றன.

மேலும், இந்த முயற்சி அம்மா கழகத் தின் ஊடாக பெண்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கும் ஒரு முக்கி யமான திட்டமாகவும் காணப்படுகின்றது. இதில் பெண்கள் பணியாளர்களாக மட்டுமல்லாது, பங்காளர்களாகவும் இணைக்கப்பட்டு வருகின்றனர்.

தேவையுள்ள பெண்கள் தமக்கு வேண்டிய உணவுகளைத் தேர்ந் தெடுத்து, அவற்றை தயாரித்து பழகும் வாய்ப்பையும் இது வழங்குகிறது.

இந்த சிற்றுண்டிச்சாலை யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் பெண் கள் சுகநல நிலையத்தின் கூட்டு முயற்சி யாக திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதற்காக அபயம் அறக்கட்டளை , IMOH - USA போன்ற அரச சார்பற்ற நிறுவனங்கள் நிதிப் பங்களிப்பை வழங்குகின்றன. இந்த நிதி பங்களிப் பானது யாழ் போதனா வைத்திய சாலை நோயாளர் நலன்புரி சங்கத்தின் ஊடாக கையாளப்படுகின்றனமையும் குறிப்பிடதக்கது.

ஆரோக்கியமான உணவு மனிதனின் உடல் நலத்தைப் பேணுவதில் இன்றிய மையாத பங்கு வகிக்கிறது. தற்போதைய காலகட்டத்தில் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் உடல் பருமன் அதிகரிக்கும் பிரச்சினை ஆண்கள் மற்றும் பெண்கள் இருபாலரிலும் காணப்படுகின்றது. குறிப் பாக பெண்களில், கருவளர்ச்சி மற்றும் குழந்தைப் பேறு போன்ற முக்கியமான உடல் நல அம்சங்களில் இதன் தாக்கம் குறிப்பிடத்தக்கதாக உள்ளது.

இவ்வாறான சூழலில், முன்கூட்டியே ஆரோக்கியமான வாழ்க்கை முறையை வழங்கி, சரியான உடல் நிறையை பேணுவதன் மூலம் சிறந்த உடல் நல விளைவுகளைப் பெற முடியும். இதற் கான அடிப்படைத் தேவையாக ஆரோக் கியமான மற்றும் சத்தான உணவு அமைகிறது.

இந்த நோக்கத்தைக் கருத்தில் கொண்டே மேற்படி சிற்றுண்டிச்சாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது.





# ‘சுப்பர் முஸ்லிம்’ தலைவர் டாக்டர் கே.எல்.எம்.றயீஸ் வர்த்தமானி அறிவிப்புக்கு எதிராக நீதிமன்று செல்வார்

**(பாறுக் ஷிஹான்)**


பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் ஜனவரி 06ஆம் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராகத் தாம் நீதிமன்றம் செல்லவுள்ளார் என சுப்பர் முஸ்லிம் அமைப்பின் தலைவர் டாக்டர் கே.எல்.எம்.ரயீஸ் தெரிவித்தார்.

இத தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த ஜனவரி 06ஆம் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் எனது பெயர் சேர்க்கப்பட்டமை தொடர்பாக, ஒரு சுருக்கமான மற்றும் பொறுப்பான விளக்கத்தை வழங்க விரும்புகிறேன்.

நான் எந்தவித வன்முறை, தீவிரவாத அல்லது சட்டவிரோத செயல்களிலும் ஈடுபட்டவனல்லன் என்பதையும் பயங்கரவாதம் தொடர்பான எந்த குற்றச்சாட்டிலும் எனக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டதோ அல்லது தண்டனை விதிக்கப்பட்டதோ இல்லை என்பதையும் தெளிவாக தெரிவிக்கிறேன்.

இந்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளிப்படையான சில உண்மைத் தவறுகள் காணப்படுகின்றன.



ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

2470/19 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 06 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

பகுதி I : தொகுதி (I) - பொது

அரசாங்க அறிவித்தல்கள்

1968 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபைச் சட்டம்

2012 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபை ஒழுங்குவிதிகளின் 4(7) ஆம் ஒழுங்குவிதியின்கீழ் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆட்கள், குழுக்கள் மற்றும் உருவகங்களின் பட்டியலுக்கான திருத்தம்

"முதலாம் அட்டவணை

உருவகங்கள்



அதில் குறிப்பிடப்பட்டுள்ள 'Super Muslim' என்ற பெயரில் இலங்கையில் எந்த அமைப்பும் இல்லை. “சஹாபி தரீகா” என்ற சொல், நபியவர்களின் தோழர்களான சஹாபாக்களின் வழிமுறையை மட்டுமே குறிக்கிறது. இது ஓர் அமைப்போ, தீவிரவாதக் குழுவோ அல்ல, மாறாக பொதுவான இஸ்லாமிய நம்பிக்கையைப் பிரதிபலிக்கிறது.

அரசிதழில் குறிப்பிடப்பட்டுள்ள தொடர்பு விவரங்களிலும் தவறுகள் உள்ளன. அதில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி எண்களில் ஒன்று எனக்கு சொந்தமானதல்ல.

மேலும், குறிப்பிடப்பட்டுள்ள இணையதளம் அல்லது ஒன்லைன் இணைப்புடன் எனக்கு எந்தவித தொடர்பும் அல்லது அறிவும் இல்லை. இவ்வாறான தவறுகள் தீவிரமான கவலைக்குரியவையாகும்.

இந்த நிலைமை தவறான தகவல்கள் அல்லது தவறான அடையாளம் காரணமாக ஏற்பட்டிருக்கலாம் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இது எனது பக்கம் இருந்து நிரூபிக்கப்பட்ட எந்தச் செயல்பாட்டினாலும் ஏற்பட்டதல்ல. இந்த விடயம் எனது மரியாதைக்கும், குடும்ப வாழ்க்கைக்கும், தொழில்முறை செயல்பாடுகளுக்கும் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, நான் சரியான சட்ட நடைமுறைகளின் மூலம் சட்ட நிவாரணங்களை நாடியுள்ளேன், மேலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் முறையான மனுக்களை சமர்ப்பித்துள்ளேன்.

நான் சட்டத்தையும் அரசமைப்பையும் இலங்கை நீதித் துறையையும் முழுமையாக மதிக்கிறேன் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

எனது விளக்கங்களையும் ஆவணங்களையும் நீதிமன்றத்தின் முன் சமர்ப்பித்து அதன் தீர்ப்பை மரியாதையுடன் எதிர்பார்க்க உள்ளேன்.

ஊகங்களைத் தவிர்த்து, சட்ட நடைமுறைகளுக்கு மரியாதை செலுத்துமாறு பொதுமக்களையும் ஊடகங்களையும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். – என்றார்.

# மன்னாரில் 21 வயதுடைய இளம் குடும்பப் பெண்ணை காணவில்லை என உறவினர்களால் பொலிஸில் புகார்

**(மன்னார் நிருபர்)**

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சௌத்பார் பகுதியில் வசித்து வந்த 21 வயதுடைய இளம் குடும்பப் பெண்ணைக் காணவில்லை என குறித்த பெண்ணின் உறவினர்களால் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மன்னார் சௌத்பார் பகுதியில் வசித்து வந்த அ. கான்சியூஸ் சகாய கீர்த்தனா (வயது 21) எனும் திருமணமான இளம் குடும்பப் பெண்ணை அவரது கணவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்குப் பற்சிகிச்சைக்காக அழைத்துச் சென்றுள்ளார்.

மனைவியை கணவன் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக விட்ட நிலையில் வீடு திரும்பி, சிறிது நேரத்தில் தனது மனைவியை அழைத்துச் செல்ல மீண்டும் வைத்தியசாலைக்குச் சென்ற போது மனைவியை வைத்தியசாலையில் காணவில்லை எனக் கூறப்படுகின்றது.

அவரைக் காணாத நிலையில் கணவர் மற்றும் உறவினர்களால் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனினும் இந்தக் குடும்ப பெண் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் இருந்து ஓட்டோவில் மன்னார் பஸ் நிலையத்திற்கு சென்று அங்கிருந்து வவனியா பஸ்ஸில் பயணித்த உள்ளமை தெரியவந்துள்ளதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பெண் காணாமல் போனமை குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




# பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் ஊடுருவல்கள்

## குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளம் பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளித்தரப்பினரால் ஊடுருவப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அமைச்சின் செயலாளர், ஓய்வுபெற்ற பிரதி பொலிஸ் மா அதிபர் ரவி செனவிரத்னவினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அமைச்சின் இணையத்தளத்தின் முகப்பு பகுதியிலுள்ள அரச இலட்சினையில் தெளிவின்மை இருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளம் பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளித்தரப்பினரால் ஊடுருவப்பட்டுள்ளதுடன், இதனை வழமைக்கு கொண்டு வருவதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கை கணினி அவசர பதில் பிரிவு மற்றும் இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவரகம் ஆகியன இணைந்து இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன.

இலங்கை கணினி அவசர பதில் பிரிவு மற்றும் இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவரகத்தின் செயலாளரால் வழங்கப்பட்ட முறைபாட்டுக்கமைய குற்றப் புலனாய்வு திணைக்களத்தினரால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் அமைச்சு மட்டத்தில் உள்ளக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



# விதை நெல் உற்பத்திப் பண்ணைகளை ஊக்குவிக்க விசேட காப்புறுதித் திட்டம்

வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லும் நோக்கில், அந்தப் பண்ணைகளுக்கு காப்புறுதி செய்யும் விசேட திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பேரிடர் நிலைமைகளை முகாமைத்துவம் செய்யும் வகையில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபை தெரிவித்துள்ளது.

ஒரு ஏக்கர் விதை நெல் செய்கைக்காக 13,600 ரூபா காப்புறுதி செலுத்த வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு செலுத்தும் பட்சத்தில், பயிர்ச் சேதம் ஏற்படும்போது ஒரு ஏக்கருக்கு ஒரு 180,000 ரூபா நட்ட ஈட்டுத் தொகையை விவசாயிகளால் பெற்றுக் கொள்ள முடியும்.

அதன்படி, வெள்ளம், வரட்சி, கட்டுப்பாடற்ற நோய்கள், பீடை மற்றும் பூச்சித் தாக்கங்கள் உள்ளிட்ட அனைத்து விதமான இயற்கை அனர்த்தங்கள் மட்டுமன்றி, காட்டு யானைகளால் ஏற்படும் பயிர்ச் சேதங்களையும் இந்தக் காப்புறுதித் திட்டத்தில் உள்ளடக்குவதாக அந்தச் சபை குறிப்பிட்டுள்ளது.




# மீண்டெழுந்தது இலங்கை தபால்துறை: 13.1 பில்லியன் ரூபா வருமானம் ஈட்டியது

இலங்கை தபால் திணைக்களம் 2025 ஆம் ஆண்டில் திறைசேரியினால் நிர்ணயிக்கப்பட்ட வருமான இலக்குகளை கடந்து, நீண்டகால தேக்க நிலைக்குப் பின்னர் ஒரு பாரிய மீண்டெழுதலைப் பதிவு செய்துள்ளது.

2025ஆம் ஆண்டில் இலங்கை தபால் திணைக்களம் 13.1 பில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டியுள்ளது.

இது திறைசேரி எதிர்பார்த்த இலக்கை விட அதிகமானது என தபால் மா அதிபர் ருவான் சத்குமார தெரிவித்துள்ளார்.

பல ஆண்டுகளாக நிலுவையில் இருந்த அஞ்சல் ஊழியர்களுக்கான நிரந்தர நியமனங்கள் 2025இல் வழங்கப்பட்டுள்ளன.

இதன்படி ஜூன் 2025 இல் 378 உப தபால் அதிபர்கள் நிரந்தர நியமனங்களைப் பெற்றனர்.

அத்துடன் செப்டம்பரில், 1,000 தபால் உதவியாளர்களின் நியமனங்கள் முறைப்படுத்தப்பட்டன.

இந்த நிலையில் திறந்த போட்டி மூலம் 600 தபால் சேவை அதிகாரிகளை பணியமர்த்துவதற்கான ஆட்சேர்ப்பு நடந்து வருவதாகவும், பெப்ரவரி 2026இல் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன என எதிர்பார்க்கப்படுவதாகவும் தபால் மா அதிபர் தெரிவித்துள்ளார்.




# க.பொ.த. உயர்தரப் பரீட்சை இன்று மீண்டும் ஆரம்பம்

டித்வா சூறாவளி காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த 2025ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் எஞ்சிய பாடங்களுக்கான பரீட்சை இன்று ஆரம்பமாகின்றது.

பரீட்சை திணைக்களம் இதனை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

அதன்படி, இன்று முதல் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை இந்தப் பரீட்சைகள் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பரீட்சை நாடு முழுவதும் உள்ள 2,086 பரீட்சை மையங்களில் நடைபெறவுள்ளது.

கடந்தாண்டு நவம்பர் மாதம் நிலவிய அதிதீவிர வானிலை காரணமாக, மாணவர்கள் எதிர்கொண்ட அசௌகரியங்களைக் கருத்திற் கொண்டு உயர்தரப் பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில், அதிதீவிர வானிலையால் தேசிய அடையாள அட்டைகளை இழந்த மாணவர்கள், கிராம அதிகாரியின் உறுதிப்படுத்தல் கடிதத்துடன் பரீட்சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மாணவர்கள், பரீட்சை நிலையங்களுக்கு தடையின்றிச் செல்வதை உறுதிப்படுத்துமாறு மாவட்டச் செயலாளர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பரீட்சைகள் தொடர்பில் ஏதேனும் சந்தேகங்கள் இருப்பின் பரீட்சைத் திணைக்களத்தின் 1911 என்ற துரித இலக்கத்தை தொடர்புகொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.



# வடக்கு ரயில் மார்க்கத்தின் புனரமைப்புப் பணி ஆரம்பம்

டிட்வா புயலினால் சேதமடைந்த வடக்கு ரயில் பாதையைப் புனரமைக்கும் பணிகள் நேற்று (11) உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க ஆகியோரின் தலைமையில் இந்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்தியாவினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட 450 மில்லியன் அமெரிக்க டொலர் அவசர நிதியுதவியில் இருந்து, இந்த முதற்கட்டப் புனரமைப்புப் பணிகளுக்காக 5 மில்லியன் அமெரிக்க டொலர் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்திய அரசாங்கத்திற்குச் சொந்தமான ரயில்வே கட்டுமான நிறுவனத்தினால் இப்பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

வடக்கு ரயில் மார்க்கம் மஹவ முதல் ஓமந்தை வரை, ஓமந்தை முதல் யாழ்ப்பாணம் வரை, மதவாச்சி முதல் மன்னார் வரை என மூன்று கட்டங்களின் கீழ் புனரமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் வடக்கு ரயில் மார்க்கத்தின் மஹவ முதல் ஓமந்தை வரையான ரயில் போக்குவரத்து மட்டுப்படுத்தப்படவுள்ளது.










# மேலும் 15 பெய்லி பாலங்களை இலங்கைக்கு வழங்கும் இந்தியா

டித்வா சூறாவளியால் நாடளாவிய ரீதியில் பாதிக்கப்பட்ட பாலங்களை புனரமைப்பதற்காக, மேலும் 15 பெய்லி பாலங்களை இந்தியா வழங்கவுள்ளது.

கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகரகம் இதனை தெரிவித்துள்ளது.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட பெய்லி பாலம் பாதிக்கப்பட்ட மற்றும் மலைப்பாங்கான பகுதிகளுக்கான போக்குவரத்தை இலகுப்படுத்த உதவுகிறது.

அதற்கமைய, கண்டி மற்றும் ராகலை பகுதிகளுக்கு இடையில் இன்று திறக்கப்பட்ட பெய்லி பாலத்தை போன்றே மற்றுமொரு பாலம் விரைவில் திறக்கப்படவுள்ளது.



# சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காக உள்நாட்டு விமான சேவை வலுப்படுத்தல்

சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காக உள்நாட்டு விமான சேவைகளை வலுப்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் அனுர கருணாதிலக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

காலியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போது அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சுற்றுலாப் பயணிகளை நாட்டிற்கு ஈர்ப்பதற்காக, சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கப்படும் வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



# டித்வா சூறாவளி அனர்த்தங்களால் சேதமடைந்த மலையக ரயில் பாதை வழமைக்குத் திரும்பும்

டித்வா சூறாவளியால் ஏற்பட்ட அனர்த்தங்களால் சேதமடைந்த நம்புக்கணை முதல் கண்டி வரையான ரயில் சேவைகளை ஒரு வருடத்துக்குள் மீண்டும் ஆரம்பிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

நம்புக்கணை முதல் பேராதெனிய வரையிலான ரயில் மார்க்கம் அதிகளவில் சேதமடைந்துள்ளதாகப் போக்குவரத்து பிரதி அமைச்சர் கூறியுள்ளார்.

இதனை புனரமைக்க சுமார் 74 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகும் என்பதுடன், பேராதெனிய யக்கா பாலத்தை புனரமைப்பதற்கு மாத்திரம் சுமார் 18 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், கடுமையாக சேதமடைந்துள்ள கம்பளை முதல் நாவலப்பிட்டிய வரையிலான ரயில் மார்க்கத்தை புனரமைப்பதற்கு 35 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகும் என்றும் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன கூறியுள்ளார்.

இதேவேளை, நாவலப்பிட்டிய முதல் நானு ஓயா வரையிலான பகுதியையும் புனரமைக்க வேண்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த புனரமைப்பு பணிகளுக்குத் தேவையான நிதியில் எந்தவித மான சிக்கலும் இல்லை என்றும் அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளுக்காக ஜனாதிபதியினால் 500 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் போக்குவரத்து பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

# பருத்தித்துறை நகரசபை எல்லைக்குள் காணப்படும் பாரம்பரிய சின்னங்களுக்கு அறிவித்தல் பலகைகள்







பருத்தித்துறை நகரசபை எல்லைக்குட்பட்டு காணப்படும் தொன்மையான பாரம்பரிய சின்னங்களின் அமைவிடத்தில் புதிய அறிவித்தல் பலகைகள் நேற்று நாட்டிவைக்கப்பட்டுள்ளன.

தொல்பொருள் திணைக்களம் மற்றும் வட மாகாண சுற்றுலாத்துறை பணியகம் என்பன இணைந்து பருத்தித்துறையில் உள்ள பாரம்பரிய சின்னங்கள், இடங்களில் மும்மொழிகளிலும் வரலாற்று தகவல்கள் அடங்கிய அறிவித்தல் பலகை நாட்டப்பட்டுள்ளது.

தும்பளை வீதியில் உள்ள தெருமுடி மடம், துறைமுக பகுதியில் உள்ள பழைய சுங்க கட்டடம் மற்றும் கலங்கரை விளக்கம் ஆகிய இடங்களில் அறிவித்தல் பலகைகள் நாட்டிவைக்கப்பட்டுள்ளன.

இதன் போது பருத்தித்துறை நகர பிதா வின்சென் டீ போல் டக்ளஸ் பொல் மற்றும் வடக்கு மாகாண தொல்பொருள் திணைக்களம், சுற்றுலா பணியக அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் பங்கேற்றிருந்தனர்.

# அரசாங்க ஊழியர்களை தி.மு.க. ஏமாற்றிவிட்டது

## பழனிசாமி குற்றச்சாட்டு



தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் என, மத்திய அரசின் ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டத்தை நகலெடுத்து அறிவித்து, அரசு ஊழியர்களை தி.மு.க. அரசு ஏமாற்றி விட்டது என்று அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில்,

“பழைய ஓய்வூதியத் திட்டம் மீண்டும் கொண்டு வரப்படும் என 2021 இல் தேர்தல் வாக்குறுதியாக அளித்து ஆட்சிக்கு வந்த தி.மு.க, கடந்த நான்கரை ஆண்டுகளாக எதுவும் செய்யவில்லை. அரசு ஊழியர்களின் தொடர் போராட்டங்களை சமாளிப்பதற்காக, ஆட்சி முடியப் போகும் நேரத்தில் ‘உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம்’ என்ற ஒரு ஏமாற்று ‘மொடல்’ திட்டத்தை அறிவித்து அரசு ஊழியர்களை ஏமாற்றியுள்ளது.

மத்திய அரசை குறைகூறும் தி.மு.க. அரசு, மத்திய அரசால் கொண்டு வரப்பட்ட ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டத்தின் பெயரை மாற்றி, தற்போது தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் என்று அறிவித்து அரசு ஊழியர்களை முதல்வர் ஸ்டாலின் ஏமாற்றியுள்ளார்.

பழைய ஓய்வூதியத் திட்டத்தில் அரசு ஊழியர்களின் பங்களிப்பு ஏதுமில்லை. ஓய்வுபெறும்போது கடைசி மாத சம்பளத்தில் 50 சதவீதம் ஓய்வூதியம், விலைவாசிப் புள்ளி உயர்வின் அடிப்படையில் அகவிலைப் படியும் கிடைக்கும். ஊதியக்குழு பரிந்துரையின்படி ஓய்வூதிய அடிப்படைத் தொகையும் மாற்றியமைக்கப்படும்.

ஆனால், தற்போது அறிவிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தில் ஊழியர்களிடமிருந்து மாதம்தோறும் 10 சதவீதம் பிடித்தம் செய்யப்படுவது ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டத்தின் அப்பட்டமான நகல் ஆகும். மேலும், பழைய ஓய்வூதியத் திட்டத்தில் இருந்த அம்சமான ஊதியக்குழு பரிந்துரை அடிப்படையில் ஓய்வூதியம் அவ்வப்போது உயர்த்தி மறுநிர்ணயம் செய்யப்படும் என்ற பரிந்துரை, தற்போது அறிவிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தில் இல்லை.

உண்மையை அரசு ஊழியர்கள் ஒருநாள் உணர்வார்கள். தாங்கள் ஏமாற்றப்பட்டதையும், அதற்கு சங்க நிர்வாகிகள் துணை போயுள்ளனர் என்பதையும் புரிந்து கொள்வார்கள். வரும் தேர்தலில் தி.மு.கவை தோற்கடித்து தக்க பரிசைத் தருவார்கள்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# இந்தியாவின் பாதுகாப்பு அரணாக பிரதமர் நரேந்திர மோடி இருக்கிறார்

## முகேஷ் அம்பானி புகழாரம்




“பிரதமர் மோடி காலத்தில்தான் இந்தியா ஒரு உலகளாவிய சக்தியாக மாறியது என்பதை வரலாறு பதிவு செய்யும். பிரதமர் மோடி இந்தியாவின் பாதுகாப்பு அரணாக இருக்கிறார்,”

– இவ்வாறு ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் தலைவர் முகேஷ் அம்பானி தெரிவித்துள்ளார்.

குஜராத்தில் நடந்த ‘வைப்ரண்ட் குஜராத்’ மாநாட்டில் பேசிய முகேஷ் அம்பானி,

“கடந்த ஐந்து ஆண்டுகளில், நாங்கள் 3.5 லட்சம் கோடி இந்திய ரூபா முதலீடு செய்துள்ளோம். அடுத்த ஐந்து ஆண்டுகளில் இந்த முதலீட்டை 7 லட்சம் கோடி ரூபாவாக இரட்டிப்பாக்கி, ஒவ்வொரு இந்தியருக்கும் அபரிமிதமான வேலைவாய்ப்புகளை உருவாக்குவோம் என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

உலகம் மிக வேகமாக மாறிக்கொண்டிருக்கிறது என்பதை நாம் அனைவரும் அறிவோம். புவிசார் அரசியல் சூழ்நிலை, எதிர்பாராத சில பதற்றங்கள் உட்பட புதிய சவால்களை உருவாக்கி வருகிறது.

இருப்பினும், இந்தியா இவற்றிலிருந்து பாதுகாக்கப்பட்டு வருகிறது. இந்த சவால்கள் நமது மக்களைத் தொடவோ அல்லது தொந்தரவு செய்யவோ முடியாது என்பதுதான் இந்தியாவுக்கு ஆறுதல் அளிக்கும் விஷயம்.

ஏனென்றால், இந்தியாவின் அசைக்க முடியாத பாதுகாப்பு அரணாக பிரதமர் நரேந்திர மோடி இருக்கிறார். உலக அரங்கில் இந்தியாவின் நம்பிக்கையை அவர் மீட்டு எடுத்துள்ளார். மோடி காலத்தில்தான் இந்தியா ஒரு உலகளாவிய சக்தியாகவும் மாறியது என்பதை வரலாறு பதிவு செய்யும்.

2036 ஒலிம்பிக் போட்டிகளை அகமதாபாத்தில் நடத்த திட்டமிட்டிருக்கும் பிரதமரின் தொலைநோக்குப் பார்வைக்கு ஆதரவளிக்க ரிலையன்ஸ் அறக்கட்டளை தயாராக உள்ளது.” – என்றார்.



# ஆட்சியில் பங்கு கேட்பதில் எங்களுக்கு உடன்பாடில்லை

## மதுரையில் வைகோ தகவல்

ஆட்சியிலும் பங்கு, அதிகாரத்திலும் பங்கு என்பதில் எங்களுக்கு உடன்பாடில்லை என மதுரையில் வைகோ தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் ஒழிப்பு, சாதி, மத மோதல் தடுப்பு உள்ளிட்டவற்றை வலியுறுத்தி, ம.தி.மு.க. பொது செயலாளர் வைகோ, கடந்த 2 ஆம் திகதி சமத்துவ நடைபயணத்தை திருச்சியில் தொடங்கினார். நடைபயணத்தின் நிறைவு விழா திங்கள்கிழமை மாலை மதுரையில் நடக்கிறது. இந்தநிலையில், உத்தங்குடி பகுதியில் நேற்று ஞாயிற்றுக் கிழமை இரவு வைகோ செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“தமிழகத்துக்கு வரும், அமித்ஷா தமிழக மக்களுக்கு உபதேசம் செய்கிறார். திராவிட இயக்க பூமியில் அவரது உபதேசம் எடுபடாது. பிரதமர் மோடி தந்திரசாலி. திருக்குறள், புறநானூறு, பாரதியார்பாடல்களைஇந்தியில்எழுதிவைத்துக் கொண்டு வாசிப்பதை வாடிக்கையாக வைத்துள்ளார். இதன் மூலம் தமிழகத்தையும், தமிழக மக்களையும் கவர நினைக்கிறார். ஆனால், தமிழகத்துக்கு ஒதுக்க வேண்டிய நிதியை ஒதுக்க மறுக்கிறார்.

தமிழகத்தில், தி.மு.கவை துடைத்தெறிந்து விடலாம் என நினைக்கிறார்கள். இதைவிட பெரிய அடக்குமுறைகளை எல்லாம் திராவிட முன்னேற்ற கழகம் சந்தித்துள்ளது. தி.மு.கவை, ஒருபோதும் இந்த பூமியில் இருந்து யாராலும் அகற்ற முடியாது. அப்படி ஒரு நிலை வந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் 8 ஆண்டுகளுக்கு முன்பு சிந்தித்து, திராவிட இயக்கத்தை பாதுகாக்க, தி.மு.கவுடன் கூட்டணி வைத்தோம். இது சித்தாந்த அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவு. அதில் உறுதியாக இருக்கிறோம்.

ஜனநாயக நாட்டில் யார் வேண்டுமானாலும், எதை பற்றி வேண்டுமானாலும் பேசலாம். அதனால், கூட்டணியிலும் பங்கு, ஆட்சியிலும் பங்கு என பேசுகிறார்கள். ஆனால், அந்த கருத்தில் எங்களுக்கு உடன்பாடில்லை. நாங்கள் அந்த மாதிரியான நிபந்தனைகளை முன்வைக்கவில்லை, வைக்கப்போவதும் இல்லை. இதற்கு பதற்றம் காரணம் இல்லை. மந்திரி சபையில் இடம் வேண்டும் என்று நானோ, எங்கள் கட்சியை சேர்ந்தவர்களோ இதுவரை கேட்டதில்லை. அவ்வாறு கூறுவதற்கு காரணம் உள்ளது. கூட்டணி பேச்சு வார்த்தை தொடங்கிய பின்னர் எத்தனை தொகுதிகளில் போட்டி என்பதை அறிவிப்போம்.” என்று தெரிவித்துள்ளார்.




# வெனிசுலாவிலிருந்து வெளியேறுமாறு அமெரிக்க மக்களுக்கு அவசர எச்சரிக்கை

வெனிசுலாவிலிருந்து அமெரிக்கக் குடிமக்கள் அனைவரும் அந்நாட்டை விட்டு உடனடியாக வெளியேறுமாறு அமெரிக்க அரசாங்கம் வலியுறுத்தியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அந்நாட்டில் ஆயுதமேந்திய குழுக்கள் பல இடங்களில் வீதித் தடைகளை ஏற்படுத்தியுள்ளனஎனதகவல்கள்வெளியாகியுள்ளன.

வீதிகளில் செல்லும் வாகனங்களை வழிமறித்துச் சோதனையிடும் இக்குழுக்கள், வாகனத்தில் இருப்பவர்கள் அமெரிக்கக் குடிமக்களா அல்லது அமெரிக்காவிற்கு ஆதரவானவர்களா என்பதற்கான சான்றுகளைத் தேடுகின்றன என தெரிவிக்கப்படுகின்றது.

# எங்கள் மீது கை வைத்தால் பதில் தாக்குதல் நடத்துவோம்

## ஈரான் எச்சரிக்கை



ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தினால் பதில் தாக்குதல் நடத்தப்படும் என ஈரான் எச்சரித்துள்ளது.

ஈரானில் தொடர்ந்தும் 14 நாள்களாக முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டத்தில் 203 பேர் வரை உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்தப் போராட்டம், ஈரானில் உள்ள ஒவ்வொரு மாகாணத்திலும் 100 இற்கும் மேற்பட்ட நகரங்களுக்கு பரவியுள்ள நிலையில் போராட்டத்தை கட்டுப்படுத்த அரசாங்கம் தமது நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளது.

ஆனால், ஈரான், தமது மக்களை கொல்லத் தொடங்கினால், மிகக் கடுமையான தாக்குதல்களை நடத்தவுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், ஈரானை எச்சரித்துள்ளார்.

இந்த நிலையில், அமெரிக்கா தாக்குதல் நடத்தினால், இஸ்ரேல் மற்றும் பிராந்தியத்தில் உள்ள அனைத்து அமெரிக்க இராணுவ மற்றும் கப்பல் தளங்கள் மீது தாக்குதல் நடத்துவதாக ஈரான் நாடாளுமன்ற சபாநாயகர் எச்சரித்துள்ளார்.

முன்னதாக, ஈரானின் உயர் தலைவர் அயதுல்லா அலி கமேனியின் மத ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவர போராட்டக்காரர்கள் அழைப்பு விடுத்திருந்தனர்.

அதற்கமைய, கடந்த டிசம்பர் 28 ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்பட்டுள்ள போராட்டங்களினால் இதுவரை 2,500 இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எனினும், ஈரானிய அரசாங்கம் இணைய சேவையை முடக்கியுள்ளதால் தகவல்களைப் பெறுவதும் சரிபார்ப்பதும் கடினமாக இருப்பதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



# சிரியாவில் ஐ.எஸ். அமைப்பினர் மீது அமெரிக்கா பாரிய வான்வழித் தாக்குதல்

தாக்குதல் சிரியாவில் நிலை கொண்டுள்ள ஐ.எஸ். அமைப்பினர் மீது அமெரிக்கப் படைகள் மீண்டும் ஒருமுறை பாரிய வான்வழித் தாக்குதல்களை நடத்தியுள்ளன.

கடந்த மாதம் அமெரிக்க வீரர்கள் கொல்லப்பட்டதற்குப் பதிலடியாக இது அமைந்துள்ளது. கடந்த மாதம் சிரியாவின் பல்மைரா பகுதியில் ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்திய திடீர் தாக்குதலில் அமெரிக்காவை சேரந்த இரு படையினர், அமெரிக்க மொழி பெயர்ப்பாளர் அயாத் மன்சூர் சகாத் ஆகியோர் கொல்லப்பட்டனர்.

இதற்குப் பதிலடி கொடுக்கப்படும் என்று ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்திருந்தார்.

அதன்படி, இந்த பதிலடி தாக்குதல் நடவடிக்கைக்கு அமெரிக்க நிர்வாகம் “ஒபரேஷன் ஹொாக்கீ ஸ்டிரைக்“ எனப் பெயரிட்டுள்ளது.

இந்த தாக்குதலில் சிரியா முழுவதும் பரவியுள்ள ஐஎஸ் தீவிரவாதிகள் பல முக்கிய நிலைகள் தகர்க்கப்பட்டன.

இந்தப் பாரிய தாக்குதலில் அமெரிக்கப் படைகளுடன் நட்பு நாடுகளின் படைகளும் இணைந்து செயல்பட்டதாக அமெரிக்க மத்திய கட்டளைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

தாக்குதல் குறித்து அமெரிக்க மத்திய கட்டளைத் தலைமையகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“எங்கள் வீரர்களுக்கு நீங்கள் தீங்கு விளைவித்தால், உலகின் எந்த மூலையில் நீங்கள் ஒளிந்திருந்தாலும் உங்களைக் கண்டுபிடித்து அழிப்போம். நீதியிலிருந்து உங்களால் தப்ப முடியாது என்பதே எங்களது வலுவான செய்தி.” என்று எச்சரித்துள்ளது.

இதற்கிடையில், இந்த அமெரிக்கத் தாக்குதலுக்கு ஒரு நாளுக்கு முன்னதாக, சிரியப் பாதுகாப்புப் படையினர் ஐ.எஸ். அமைப்பின் முக்கிய இராணுவத் தலைவரைக் கைது செய்துள்ளனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.



# இன்றைய ராசி பலன்கள் -12.01.2026




இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். முன்னேற்றம் பெறுவதற்கான வலிமையையும் உற்சாகமும் உங்களிடம் காணப்படும். இன்று அனைத்து விதத்திலும் செழிப்பாக இருக்கும்.

புதிய வாய்ப்புகளால் உற்சாகமும் திருப்தியும் காணப்படும். உங்கள் பணிகளை மகிழ்வுடன் செய்வீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையே நெருக்கம் அதிகரிக்கும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். ஸ்திரமான நிதிநிலை காணப்படும்.

மகிழ்ச்சியின் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சீரும் சிறப்புமாக இருக்கும்.




இன்றைய நாள் முழுஅளவிலான அனுகூலத்தை அளிக்காது. பலன்கள் தாமதமாக கிடைக்கும். உங்கள அர்ப்பணிப்பும் நீங்கள் கையாளும் முறையும் உங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

பணிகளை திட்டமிட்டு அதன்படி செயல்படுத்தினால் கடைசி நிமிட அல்லல்களை தவிர்க்கலாம். அதனால் பதட்டமின்றி காணப்படலாம்.

நீங்கள் உங்கள் கணவன் ஃ மனைவிக்கு உற்ற துணையாக இருங்கள். உங்கள் இனிமையான வார்த்தைகளால் உற்சாகப்படுத்துங்கள். இதனால் உறவு வலுப்படும்.

சாதாரணமாக செய்யும் செலவை விட இன்று அதிகமாக செலவு செய்வீர்கள்.என்றாலும் பணத்தை பயனுள்ள நோக்கத்திற்காக செலவு செய்வீர்கள்.

இன்று எண்ணெய் பதார்த்தங்களை உண்ண வேண்டாம். அது உங்கள் தோலை பாதிக்கும்.




உங்கள் மனதில் இருக்கும் குழப்பம் காரணமாக இன்று சிறிது அமைதியின்மை காணப்படும். இது உங்கள் முடிவெடுக்கும் திறமையை பாதிக்கும்.

உங்கள் பணிகளை ஆற்றும் போது கவனம் தேவை. இல்லாவிடில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. இது சிக்கலுக்கு வழிவகுக்கும்.

உங்கள் துணையுடன் தவறான புரிந்தணர்வு காணப்படும். இதனால் வாக்கு வாதங்கள் ஏற்படும். இத்தகைய சூழ்நிலையை தவிர்ப்பது நல்லது.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. திட்டமிடலின்மை காரணமாக நீங்கள்சில பிரச்சினைகளை சந்திக்க நேரும். இன்று சுறுசுறுப்பாக இருக்க வேண்டியது அவசியம்.

இன்று உங்களால் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்க இயலாது. தோள் அல்லது கணுக்கால் வலி காணப்படும்.




இன்றைய நாள் ஆக்கமுடைய நாளாக அமையும். சிறிய தொலைவிலான பயணமும் மற்றும் சில மாற்றங்களின் காரணமாக உங்கள் தைரியத்தையும் உறுதியையும் நீங்கள் இழக்க நேரலாம்.

குறித்த நேரத்திற்குள் கொடுக்கப்பட்ட பணியை முடிப்பது சற்று கடினமாக இருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் மற்றும் உங்கள் துணையின் இடையே தொடர்பாடலில் இடைவெளி காணப்படும். இது உறவின் சீரமைப்பை கெடுக்கும். விஷயங்களை எளிதாக எடுத்துக் கொள்வது நல்லது.

நிதிநிலைமை சீராகவோ நல்ல முறையிலோ காணப்படாது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வது இயலாது.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. சூடு அல்லது வெப்ப சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படலாம்.




இன்று காணப்படும் சிறிய பிரச்சனைகளை கையாள கடின முயற்சி தேவை .

பணி வளர்ச்சியைப் பொருத்தவரை இன்று உகந்த நாள் அல்ல. இன்று பணிச் சுமை காணப்படும். பணியை திட்டமிட்டு ஆற்ற வேண்டும்.

இன்று மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் துணையுடன் உரையாடும் போது கவனம் தேவை. எந்த விஷயத்தையும் இலேசாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

நிதி சம்பந்தமான முக்கிய முடிவுகள் இன்று எடுப்பதை தவிர்க்கவும். பெரிய முதலீடுகள் முயற்சி இன்று ஏற்புடையதல்ல.

இன்று பல்வலி அல்லது செரிமானம் போன்ற பிரச்சினைகள் ஏற்படலாம். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.




இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க மிகுந்த பொறுமை அவசியம். நம்பிக்கையுடன் செயல்பட்டால் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

இன்று அதிக பணிச்சுமைகள் காணப்படும். நீங்கள் திறமையுடன் பணியாற்ற உங்கள் பணிகளை திட்டமிட வேண்டும்.

உங்களின் அகந்தைப் போக்கு உங்கள் துணையுடனான பிணைப்பை பாதிக்கும். உங்கள் கடுமையான வார்த்தைகள் அவரை பாதிக்கும். உங்கள் பிரியமானவருடன் மகிழ்ச்சியாக இருக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. பண வரவிற்கான வாய்ப்பு குறைவு.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும்.




நீங்கள் உங்கள் ஆற்றல் மூலம் வெற்றி காண்பீர்கள். உங்கள் மனது தெளிவாக இருக்கும். எனவே உங்கள் செயல்களை சிறப்பாக ஆற்றுவீர்கள். உங்களின் உறுதி காரணமாகஇன்றைய நாளை கழிப்பது உங்களுக்கு எளிதாக இருக்கும்.

புதிய வேலை வாய்ப்புகளால் நம்பிக்கையுடனும் புத்துணர்ச்சியுடனும் இருப்பீர்கள். உங்கள் பணிகளை விரைந்து மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பு வயப்பட்ட நிலையில் இருப்பீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

இன்று உங்களிடம் போதிய பணம் காணப்படும். பணத்தைப் பொறுத்த வரை திருப்தியான நிலை இருக்கும்.

உங்களிடம் காணப்படும் தைரியம் காரணமாக இன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




உங்கள் மனதில் சில இலக்குகளை கொண்டிருப்பீர்கள். அவைகளை செயலாற்றுங்கள். அதனை எளிய வழியில் அடையலாம். பயணத்தின் மூலம் ஆதாயம் கிடைக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் திறமைக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். பணிகளை உற்சாகமாக மேற்கொள்வீர்கள்.

நீங்கள் இருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டதன் காரணமாக உங்கள் துணையுடன் நல்ல தொடர்பு கொண்டிருப்பீர்கள்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். கூடுதல் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் கிடைக்கும்.

இன்று உங்களிடம் அதிக ஆற்றலும் சுறுசுறுப்பும் காணப்படும். இதனால் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் -12.01.2026




இன்று சற்று அனுகூலமற்ற நாளாக இருக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க இயலாத நிலை இருக்கும். இன்று பொறுமை அவசியம். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ளுங்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணியிடச் சூழலில் சுமூகமான நிலை இருக்காது. சக பணியாளர்களுடனான தொடர்பில் சில பிரச்சினைகள் காணப்படும்.

இன்று முழுவதும் உங்கள் துணையுடன் அமைதியாக கட்டுப்பாட்டுடன் பழகுங்கள். தேவையற்ற பேச்சுக்களை தவிர்க்கும் வகையில் நாவடக்கம் மேற்கொள்ளுங்கள்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். செலவுகள் அதிகமாக இருக்கும். உங்கள் தேவைகளுக்காக கடன் வாங்குவீர்கள்.

தோல் அரிப்பு மற்றும் களைப்பு காரணமாக ஏற்படும் போதிய தூக்கமின்மை உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.




இன்று உங்களுக்கு சிறப்பான நாள். உங்கள் அக்கம் பக்கத்தவரின் ஆதரவு கிடைக்கும். இன்று அனைத்தும் சிறப்பாக நடக்கும். இன்று நல்ல பலன்கள் கிடைக்கும்.

உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். அவர்கள் உங்களை பாராட்டுவார்கள். உங்கள் கடின உழைப்பு மற்றும் திறமை வெளிச்சத்திற்கு வரும்.

உங்கள் துணையுடன் விருந்து விசேஷங்களில் கலந்து கொள்ள வேண்டிய நேரம். இதில் நீங்கள் பங்கு கொண்டு மகிழ்வீர்கள். உங்கள் துணையிடம் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வீர்கள்.

வெளி நாட்டிலிருந்து பணம் கிடைக்க வாய்ப்புள்ளது. உங்களுக்கு தேவைப் படும் பொழுது அந்தப் பணம் கிடைக்கும்.

நேர்மறையான எண்ணம் மற்றும் திட்டமிடல் மூலம் இன்று பதட்டமின்றி இருக்கலாம். இதனால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்களுக்கு பயன் தரும் வகையிலான சரியான முடிவுகளை இன்று உங்களால் எடுக்க இயலும். இன்று நன்மைகள் நடைபெறும் நாள்.

நீங்கள் உங்கள் பணிகளை ஆர்வத்துடனும் உறுதியுடனும் ஆற்றுவீர்கள். சுய முயற்சி காரணமாக நன்மை அடைவீர்கள்.

நீங்கள் இன்று உங்கள் துணையுடன் விருந்துகளில் கலந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். மேலும் சமூக வட்டாரத்தில் கலந்து பழக முடியும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். நிதிகளில் முதலீடு செய்வது இன்று பலனளிக்கும்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் இருக்கும் ஆற்றல் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். உங்கள் நடவடிக்கைகளில் கவனம் தேவை.இன்று உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும்.

உங்கள் சகபணியாளர்களுடன் சச்சரவுகள் ஏற்படலாம்.பொறுமையுடன் இருந்து செயலாற்றவும்.

தொடர்பாடலில் உள்ள குறைபாடு காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். புரிந்துணர்வு மூலம் இதனை தவிர்க்கலாம்.

இன்று பணப் பற்றாக்குறை காணப்படும். இன்று காணப்படும் செலவினங்களை சமாளிக்க கடன் வாங்க நேரலாம்.

உங்களுக்கு கால்வலி ஏற்பட வாய்ப்புள்ளது. உடற்பயிற்சி மேற்கொள்வது நல்லது.




# 80 ஆவது ஆண்டில் வயாவிளான் மத்திய கல்லூரி

இலவசக் கல்வி வழங்கும் அரச பாடசாலைகள் திட்டத்தில் 1946 ஆம் ஆண்டு ஜனவரி 16 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட – யாழ். மாவட்டத்தில் முன்னணி பாடசாலைகளில் ஒன்றான – வயாவிளான் மத்திய கல்லூரி தனது 80 வது ஆண்டு நிறைவை எதிர்வரும் 16 ஆம் திகதி எட்டுகின்றது.

பரீட்சை நடைபெறும் நிலையம் என்பதால் இது தொடர்பாக விசேட பொங்கல் நிகழ்வு

அன்றைய தினம் (வெள்ளிக்கிழமை) காலை 10 மணியளவில் வயாவிளான் சந்தியில் அமைந்துள்ள மானம்பராய் பிள்ளையார் ஆலயத்தில் பாடசாலை சமூகம் சார்பில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கொரோனா தொற்று காரணமாக 75 வது ஆண்டு நிகழ்வு 2021 ம் ஆண்டு நடத்த முடியாத நிலை ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.